எழுதிக்கொடுத்துவிட்டார், அக்ரிமெண்டும் செய்துவிட்டார், ஆனால் லைனும் இழுக்கப்படவில்லை, கம்பமும் நடவில்லை. அவர் இரண்டு வருடமாக மினிமம் சார்ஜ் கொடுத்துக்கொண்டு வருகிறார். ரூல்ஸ் ஆண்ட் ரெகுலேஷன்ஸும் . . .

(The hon. Member had not concluded his speech when the Hon. Speaker rang the bell and made the following announcement.)

IV.—ANNOUNCEMENTS—*cont.*

(2) DECISIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER : I have to make the following announcement regarding the decisions of the Business Advisory Committee which met at half past ten to-day.

The Committee decided that the consideration of the Report of the Rules Committee be taken up at the next sitting of the Assembly.

The Committee decided that the following items of business be taken up on the 5th November 1958 :—

(1) Motion relating to the setting up of a Joint Select Committee to consider the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958.

(2) The further consideration of the Tiruchirappalli-Kaiaeruwaram and Mattuwaram Bill, 1958.

(3) Consideration of the amendments to the Madras Panchayats Bill, 1958, if any.

(4) The Madras Betting Tax (Amendment) Bill, 1958.

The Committee also decided that the Assembly, if necessary, shall sit in the afternoon of the 5th November. It is hoped that it will adjourn on that day.

The Committee considered the proposal for holding a session of the Legislature at Ootacamund and decided, Sri C. N. Annadurai dissenting, that a session of the Legislature may be held at Ootacamund whenever possible.

VIII.—MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET—*cont.*

11-30 a.m.

* SRI A. SAMUEL NADAR : கனம் சபாநாயகர் அவர்களே, நமது ராஜ்யத்தில் 70 கோடி மூலதனமுள்ள நமது மின்சார அமைப்பைப்பற்றியுள்ள அறிக்கையை படிப்பதற்கு மிக உற்சாகமும் நம்பிக்கையும் அளிப்பதாக இருக்கிறது. கடந்த வருடங்களில் நாலைந்து மடங்கு நாம் வளர்ச்சியடைந்திருக்கிறோம். நமது மாநிலம் மற்ற மாநிலங்களைவிட, கிராமிய மின்சார விஷயத்தில் முதல் ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. விவசாய உபயோகத்திற்கும் மின்சாரம் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இது விஷயத்தில் இப்போதுள்ள சில விதிகளைத் தளர்த்திப் போடப்பட்டிருக்கும் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. 1951-லிருந்து நமது மின்சார இலாகா பரந்த அளவு விரிவடைந்திருக்கிறது. 1951-ம் வருஷத்திலிருந்து நமது இலாகா நிச்சயமாக ஆறு லட்சம் கிலோவாட்ஸ் உற்பத்தி செய்து நமது லட்சிய அளவை அடையலாம் என்று நாம் நம்பலாம். இவ்வளவு வளர்ச்சிக்கிடையே நமது இலாகா விவசாயத்திற்கு இன்னும் அதிகமாகச் சலுகை கொடுத்து விவசாயத்தைச் செழிக்கச் செய்யவேண்டும். பகல் நேரத்தில் ஹெவரேஜ் லோடு கணக்கெடுத்து அதிகநேரம் உபயோகப்